**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No. 299/2019 P.W. 9/L.W.8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. வைத்தியலிங்கம் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. சுப்பிரமணயபிள்ளை | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.07.2025.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தனியார் பைனான்ஸ் வங்கியில் பணி செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். நான் 2013ம் வருடம் இராஜாக்கமங்கலம் Kossamattam என்ற பைனான்ஸ் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்தேன். அப்பொழுது மார்ச் மாதம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் 9 கிராம் எடையுள்ள ஒரு தங்கச் செயினை எங்களது வங்கியில் ரூபாய் 22 ஆயிரத்துக்கு அடகு வைத்து பணம் பெற்றார். அவர் அடகு வைக்கும் போது அவருடைய ஆதார் அட்டையை சரிபார்த்து தான் நகை அடகை ஏற்றுக் கொண்டோம். அதே மாதம் மண்டைக்காடு காவல்நிலைய ஆய்வாளர் குற்றம் சுமத்தப்பட்ட நபரை அழைத்துக் கொண்டு காவலர்களுடன் நான் பணிபுரியும் வங்கிக்கு வந்தார்கள்.

2. அவர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கள் வங்கியில் அடகு வைத்தது திருட்டு நகை என்றும் அந்த திருட்டு செயினை அவர்களிடம் ஒப்படைக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள். உடனே எனது உயரதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து அதன் பிறகு அவர்களின் உத்தரவின் பேரில் போலிசாரிடம் அந்த 9 கிராம் எடையுள்ள தங்கச் செயினை ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்கச் செயின் எனது பைனான்ஸ்லில் அடகு வைத்த நகையாகும். அதனை தான் நான்

போலிசாரிடம் ஒப்படைத்தேன். அந்த **புகைப்படம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்னிடம் நகையை அடகு வைக்கும் போது அந்த நகை ஒரே நகையாக இருந்ததா அல்லது துண்டு துண்டாக இருந்ததா என்றால், ஒரே நகையாக தான் இருந்தது. போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால், 09.03.2013ம் தேதியன்று நான் பணிபுரியும் பைனான்ஸ்ல் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் கூறினேன் என்றால், சரிதான்.

2. நான் கூறியதை போலிசார் எழுதி கொண்டார்களா என்றால், சரிதான். நான் பணிபுரியும் நிறுவனத்தில் வைத்து எனது வாக்குமூலத்தை எழுதினார்களா என்றால், அவர்கள் நகைகள் கேட்டவுடன் நான் எனது உயரதிகாரிகளிடம் கேட்டு நகையை எடுத்துக் கொண்டு காவல்நிலையம் சென்றேன், அப்பொழுது எனது வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார்கள். நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான்.

3. 2013ம் வருடம் நான் பணிபுரியும் பைனான்ஸ்ல் CCTV உள்ளதா என்றால், உள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கள் பைனான்ஸ்–ல் நகையை அடகு வைத்தது பதிவாகியிருக்கும் என்றால், சரிதான். அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கலாமா என்றால், அது எனது பைனான்ஸ் நிறுவனத்தின் உயரதிகாரிகளிடம் தான் கேட்க முடியும். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு போலிசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.